வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.01.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 07 பக்கங்கள் : 12

## அரிசி பதுக்கல் வடக்கில் இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 07

வடக்கு மாகாணத்தில், பாரியளவிலான அரிசி பதுக்கல்கள் இடம்பெறவில்லை என பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஐக்வார் சாதிக் தெரிவித்தார்.

அரிசி தொடர்பில், வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரிசி விற்பனை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு 11

# வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் கப்பம் கேட்ட கடந்தகால அரசுகள்!

## வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்திடம் தென்கொரிய, ஆஸி. தூதுவர்கள் முறையீடு



கொழும்பு, ஜன. 07

**கடந்த அரசாங்கங்களின் காலத்தில் நாட்டிற்கு வந்த தென் கொரிய மற்றும் அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களிடம் முன்னாள் அமைச்சர்கள் கப்பம் கோரினர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் இலங்கைக்கு வந்த தென்கொரிய மற்றும் ஆஸ்திரேலிய முதலீட்டாளர்களிடம் கப்பம் கோரப்பட்டதால் தாம் தமது முதலீடுகளை கைவிட்டதாக தென் கொரிய மற்றும் ஆஸ்திரேலிய தூதுவர்கள், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாக முறையிட்டுள்ளனர். 11

## மக்கள் மனங்களில் உள்ள வடுக்களை கிளீன் சிறிலங்கா தணிக்கவேண்டும்!

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

- பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், ஜன. 07

கிளீன் சிறிலங்கா என்பது தனியே, சுத்தம், சுகாதாரத்தை முன்னிறுத்தி வீதிகளை தூய் மைப் படுத்தல் என்பவற்றுடன் இந்த அரசின் நோக்கங்கள் இலக்குகள் அமைந்து விடக் கூடாது. அது மக்கள் மனங்களில் 11

## நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பு மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துங்கள்

### சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜன. 07

நீதித்துறைக் கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும். அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒரு போதும் இடமளிக்கக் கூடாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சட்டமா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் சட்டமா 11

## 1 கிலோ அரிசி 300 ரூபாவுக்கு வாங்கவேண்டிய நிலை வரும்

### ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 07

அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வை வழங்குவதற்கு பதிலாக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு நன்மை கிடைக்கும் வகையில் விலை அதிகரிப்பை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார். அடுத்த புத்தாண்டின்போது ஒரு கிலோ அரிசியை 300 ரூபாவுக்கு வாங்க வேண்டிய நிலைமை நாட்டு மக்களுக்கு ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11



## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ். மடத்தடி பகுதியில் கையெழுத்து!

யாழ்ப்பாணம், ஜன. 07

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, போராளிகள் நலன்புரிச் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகணத்தில், வவுனியா, மன்னார், முல்லைதீவு, கிளிநொச்சி மாவட்டங்களில், 11

## எலிக்காய்ச்சல் நோயினால் கிளிநொச்சியில் இருவர் பலி!

கிளிநொச்சி, ஜன. 07

கிளிநொச்சியில் எலிக்காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்படும் நோய் காரணமாகக் கடந்த இரண்டு வாரங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி - முழங்காவில் மற்றும் கண்டாவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே உயிரிழந்ததாக அவர் கூறினார்.

எனவே காய்ச்சல், தசைநோவு, கண்சிவத்தல், சுவா சப்பிரச்னைகள் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக வைத்திய பரிசோதனைகளை 11

## வீதியில் திரியும் கட்டாக்காலிகளின் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை!

### வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதிரடி

- பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், ஜன. 07

வடக்கு மாகாணத்தில் வீதிகளில் சுற்றித் திரியும் கட்டாக்காலிகளின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, அதனையும் பொருட்படுத்தாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா 11

## ஊடகங்களை அரசு விமர்சிக்கின்றது!

### நாமல் ராஜபக்ஷ விசனம்

கொழும்பு, ஜன. 07

அரசாங்கம் தம்முடைய இயலாமையை மறைக்க ஊடகங்களை விமர்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகங்களுக்கு பாரிய சுதந்திரத்தை 11

## நோய்த் தாக்கத்தினால் நெற்செய்கை பாதிப்பு!

### இம்முறையும் பெரும் நட்டம் கிளிநொச்சி விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன. 07

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வெள்ள அனர்த்தத்தினால் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. தற்போது சுபில நிறத் தத்தி மற்றும் மடிச்சுக்கட்டி நோய்த்தாக்கம் அதி கரித்த நிலையில் நெல் பூரணமாக முதிர்வடையாத நிலையில் விவசாயிகள் அறுவடை 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமானில் உயிரிழந்த இலங்கை யுவதி:

# சமுர்த்தி அலுவலர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் மறியலில்!

கொழும்பு, ஜன. 07

**பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு ஓமானில் உயிரிழந்த இலங்கை யுவதியொருவரை தொழிலுக்காக அனுப்பிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.**

அம்பாந்தோட்டை - சூச்சி கிராமத்தைச் சேர்ந்த 22 வயதான இளம் யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பணியகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த யுவதிக்கும் அவரது மூத்த சகோதரிக்கும் டுபாயில் தாதியர் சேவையில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி அவர்களை ஓமானில் வீட்டு வேலைக்கு அனுப்புவதற்கு சந்தேக நபர்கள் செயற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விஸாவில் வெளிநாடு சென்றமையினால் தொழிலின்றி ஓமானின் பல்வேறு இடங்களிலும் குறித்த யுவதிகள் இருவரும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தமது தங்கை கடந்த 22 ஆம் திகதி உயிரிழந்ததாக மூத்த சகோதரி தனது தாய்க்கு அறிவித்துள்ளார்.இதற்கமைய குறித்த யுவதியையும் அவரது மூத்த சகோதரியையும் ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிய அம்பாந்தோட்டை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கூறியுள்ளது.

சந்தேகநபர்கள் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதாகவும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அரச ஊழியர்களின் விடுப்பு புதிய வழிகாட்டல் வெளியீடு

கொழும்பு, ஜன. 07

அரச அதிகாரிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சம்பளமில்லாத விடுமுறையை அங்கீகரிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது.

அனைத்து மாவட்டச் செயலர்களுக்கும் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு அறிவிப்பின்படி, அரசு அலுவலர்களுக்கு அவர்களின் ஓய்வூதிய உரிமைகள் பாதிக்கப்படாமல் ஊதியம் இல்லாத விடுப்பு வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அதிகாரிகள் ஐந்து வருடங்கள் வரை உள்நாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்துள்ளதுடன், தமது முன்கூட்டிய உள்நாட்டு விடுமுறையை உரிய முறையில் இரத்து செய்யாமல் வெளிநாட்டு விடுமுறைக்கும் விண்ணப்பித்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய வழி காட்டுதல்கள் வெளிநாட்டு விடுப்புக்கான விண்ணப்பங்களுக்கு விண்ணப்பதாரரின் விடுப்பு வரலாற்றின் விரிவான மதிப்பாய்வைச் சேர்ப்பது கட்டாயமாக்குகிறது.

விண்ணப்பங்களுடன் உள்ள கவர் கடிதங்களில் ஏற்கனவே பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுப்பு விவரங்களை சரிபார்க்கவும் ஆவணப்படுத்தவும் மாவட்ட செயலாளர்கள் பணிபுரிகின்றனர்.

புதிய வழிகாட்டுதல்கள், விடுப்பு அனுமதிச் செயல்பாட்டில் காணப்பட்ட முறைகேடுகளை நிவர்த்தி செய்வதையும் ஜூன் 22, 2022 திகதி வெளியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு இணங்குவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ)

# பஸ்களில் பயணிப்போரின் பாதுகாப்புக்கு புதிய திட்டம்

கொழும்பு, ஜன. 07

பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்புக்காக பயணிகளின் உரிமைகள் பட்டியலை தயாரிக்கத் தொடங்கியுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பயண அனுமதிப்பத்திரத்தில் உள்ள அனைத்து நிபந்தனைகளையும், மாகாண சபைகளின் பஸ் அனுமதிப்பத்திரம் வழங்குவதில் உள்ள நிபந்தனைகளையும் உள்ளடக்கி பயணிகளின் உரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் பஸ் சங்கங்கள் மற்றும் பயணிகள் சங்கங்களுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை எட்டவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி திலிப விதாரண தெரிவித்தார்.

தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மூன்று மில்லியனாக அதிகரிப்பதே திட்டம்

## கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஜன. 07

இந்த வருடத்தில் மூன்று மில்லியன் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு கொண்டுவருவதே எமது இலக்காகும் என வெளிவிவகார, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பெந்தொட்டை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத நிலையம் ஒன்றை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சுற்றுலாத்துறை என்பது வெறுமனே கைத்தொழில் மாத்திரமல்ல. அது எமது நாட்டின் கலை, கலாசாரத்தை உலகுக்கு கொண்டு செல்லும் மத்திய நிலையமாகும். அதனால் சுற்றுலா துறையை கிராமிய மக்களுடனும் தொடர்புபடுத்துவதே எமது திட்டமாகும்.

கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி, இந்த வருடத்தின் சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்கான 2 மில்லியனை பூரணப்படுத்தியுள்ளோம்.

அதனால் இந்த வருடம் அந்த எண்ணிக்கையை 3 மில்லியன் வரை அதிகரித்துக் கொள்ளவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதன்போது, சுற்றுலாப் பயணிகளின் வருகை அளவை அதிகரிப்பது போன்று சுற்றுலா பகுதிகளின் முன்னேற்றத்தையும் அதிகரித்துக் கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# புதிய வாகனங்களின் இறக்குமதிக்கு எதிர்ப்பு

## பயன்படுத்தப்பட்ட வாகனங்களை அனுமதிக்குமாறு அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 07

புதிய வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தரமான பயன்படுத்தப்பட்ட வாகனங்களை மாத்திரமே நாட்டுக்குள் அனுமதிக்குமாறு இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது வெளிநாட்டு நாணயம் மற்றும் அரச வருமான பிரச்சினைகளுக்கு உதவும் என்று அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதிய வாகனங்களை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கும், உயர்தர பயன்படுத்தப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்வதை ஊக்குவிப்பதற்கும் தமது சங்கம் அரசாங்கத்துக்கு ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளதாக சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரேஞ்சிகே தெரிவித்தார்.

இது அமெரிக்க டொலர்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும். அத்துடன் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்கள் ஒரு வாகனத்தை வாங்கவும், அரச வருமானத்தை அதிகரிக்கவும் உதவும் என்று அவர் குறிப்பிட்டார்.ஒவ்வொரு ஆண்டும் வாகனங்களின் இறக்குமதியால், சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டில் இருந்து வெளியேறுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இரவு நேரத்தில் சிகிரியா குன்றுக்கு செல்ல அனுமதி!

கொழும்பு, ஜன. 07

வரலாற்றுச் சிறப்புமிக்க சிகிரியா கோட்டையை நிலவு இரவுகளில் சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பதற்கு சுற்றுலா அமைச்சு தீர்மானித்துள்ளது.

பௌர்ணமி தினத்தை இலக்காகக் கொண்டு மாதத்திற்கு ஐந்து நாட்களுக்கு 'சிகிரியா நிலவில்' என்ற வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, பௌர்ணமி தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் பௌர்ணமி தினத்திற்கு பின்னரான இரண்டு நாட்களிலும் பௌர்ணமி தினத்தன்றும் சுற்றுலா பயணிகள் சிகிரியாவை பார்வையிடலாம்.

சுற்றுலாத்துறையின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர், உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, ஜன. 07

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் ஆர். ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆர். எம். டபிள்யூ. ராஜபக்ச, பேராசிரியர் ஜோசப் யோகராஜா மற்றும் லரீனா அப்துல் ஹக் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கப்பட்டன. (அ)

# 10 ஆம் திகதிக்கு முன்னர் எரிபொருள் மானியத்தை வழங்க அரசு தீர்மானம்!

கொழும்பு, ஜன. 07

நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கான எரிபொருள் மானியத்தை வழங்குவதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அதற்கமைய, குறித்த மானியங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் பிரதியமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

காலி - ஹபராதுவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.சிறு தொழிலாக மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கும் நெடுநாள் படகு உரிமையாளர்களுக்கும் குறித்த எரிபொருள் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மீன்பிடியில் ஈடுபடுபவர்களின் உபகரணங்களின் விலை அதிகமாக உள்ளதாக பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.குறித்த விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
07.01.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

தோல்விகளிலிருந்து கற்றுகொள்ளுதல் என்று கூறும் போது - கூடவே இன்னொரு கேள்வி எழும் - ஈழத் தமிழர் அரசியலில் என்றாலே அது தோல்விதானே - அவ்வாறாயின் எந்தத் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்வது? இது ஒரு சிக்கலான விடயம்தான் ஏனெனில் ஈழத் தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகவே இருக்கின்றது.

தோல்விகளே தொடர்கதையாக இருக்கின்றது. அரசியல் தரப்பின் தோல்வி - அரசியல் தரப்புக்களை ஒன்றுபடுத்தி முன்னகர்த்தப் போவதாக கூறிய சிவில் சமூகத்தின் தோல்வி - பல்கலைக்கழக மாணவர்கள் என்னும் அடையாளத்துடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பது போல் படுதோல்வி. யாழ்ப்பாண பல்கலைக்கழக புத்திஜீவிகளின் தலையீடுகள் அனைத்தும் தோல்வி - மதத் தலைவர்கள் என்போரின் அனைத்து தலையீடுகளும் தோல்வி. இப்படியாக அனைத்துமே தோல்வியாக இருக்கின்ற சூழலில் எங்கிருந்து எதைக் கற்றுக்கொள்வது என்பது ஒரு பிரச்னைதான்.

இந்தத் தோல்விகள் அனைத்திற்கும் இடையில் ஒற்றுமையுண்டு. முதலில் அதனை இனங்காண முயற்சிக்க வேண்டும். ஏன் ஈழத் தமிழர் அரசியல் நகர்வுகள் அனைத்தும் இறுதியில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட விட்டுச் செல்லாத வகையில் தோல்வியில் முடிகிறது?

இதற்கான அடிப்படை காரணம் ஒன்றுதான் கடந்த 75 வருடகால அரசியலில் தீர்மானிக்கும் தலைவர்களாக வெளித்தெரிந்தவர்கள் அனைவருமே தங்களின் பலத்தை மிகையாக மதிப்பிட்டவர்கள் தான் - தாங்கள் யார் என்பதையும், நாங்கள் எந்த இடத்திலிருக்கின்றோம், எங்களின் பலம் என்ன? - எங்களுக்கான வாய்ப்புக்கள் என்ன? - சவால்கள் என்ன - அச்சுறுத்தல்கள் என்ன என்பதை துல்லியமாக மதிப்பிட்டு செயல்பட்டிருக்கவில்லை - தலைவர்கள் என்போருக்கு இந்த விடயத்தில் தூரநோக்கு மிக்க அவதானம் இருக்கவேண்டும் - அப்படியில்லாத போது, அவர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் இறுதியில் விழலுக்கிறைத்த நீராகவே போகும். நாங்கள் தியாகங்கள் செய்தோம் என்று மனப்பாடம் செய்து கொண்டிருப்பதால் ஓர் இனம் முன்னேறிவிட முடியாது.

இன்றுள்ள அரசியல் கட்சிகள் என்போர், சிவில் சமூக அமைப்புக்கள் என்போர், பல்கலைக்கழக புத்திஜீவிகள் என்போர், அரசியலில் தங்களுக்கும் ஓர் இடமிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்போர் அனைவரும் கடந்த 75 வருடங்களாக, எவையெல்லாம் தோல்விக்கான காரணங்களாக இருந்தனவோ - அதனையே இப்போதும் கைக்கொள்கின்றனர்.

கடந்த 75 வருடங்களாக எந்தச் சுலோகங்கள் எல்லாம் படுமோசமான தோல்வியை பதிவு செய்திருக்கின்றனவோ - அவற்றை மீண்டும் உச்சரிப்பதில் புளகாங்கிதம் கொள்பவர்களாகவே இருக்கின்றனர். இதன் காரணமாகத்தான் கடந்த பதினைந்து வருடங்களில் இவர்கள் கூறிய எந்தவொரு விடயத்திலும் சிறிய முன்னேற்றத்தைக் கூட இவர்களால் காண்பிக்க முடியவில்லை.

ஒன்றைப் பற்றி பேசுகின்ற போது, அதனை அடைவதற்குள்ள தங்களின் பலத்தை அறியாத போது, இவர்களால் இனியும் எந்தவொரு விடயத்தையும் செய்யமுடியாது. கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவர் சுலோகங்களை உச்சிப்பதால் கரையேறுவாரா அல்லது கிடைக்கும் ஏதோவொன்றை - ஒருவேளை அது ஒரு மரக்கட்டையாக இருக்கலாம் - அதனைப் பற்றிப்பிடிப்பதால் கரையேறுவாரா? கடந்த காலத்தின் தோல்வி போதிய படிப்பினைகளை தந்திருக்கின்றது - அதிலிருந்து கற்றுக்கொண்டால் மீளவுண்டு.

# அரிசி பதுக்கலை தடுப்பதற்கு வடக்கில் 774 சுற்றிவளைப்புகள்

வவுனியா, ஜன.07

அரிசி பதுக்கலை தடுப்பது தொடர்பில் வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வட மாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

அரிசி விற்பனை தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி 2024 ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பில் வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் அரிசி தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வடக்கு மாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எவையும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

# யாழ்.பல்கலையில் கையெழுத்து போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன.07

நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் இந்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி குறித்த கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் மதத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்திட்டனர். (எ-05)

# வாகனத்தை மறித்த விடயத்தில் இளங்குமரன் செய்தது நல்லதே

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.07

சுண்ணக்கல் ஏற்றி வந்த வாகனத்தை மறித்த விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் செயல்பட்ட விதம் பரவாயில்லை அல்லது நல்லது. கல் அகழ்வு விடயத்தில் அதிகாரிகளின் அசமந்தப் போக்கு தொடர்வதாக கடற்தொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சரசாலை பகுதியில் கல் அகழ்ந்த பகுதிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுண்ணக்கல் ஏற்றி சென்ற போது, பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வழி மறித்து அந்த வாகனத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இந்த விடயமானது கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது. இந்த நிலையில் நீங்கள் செய்தது தவறு, குற்றச்செயல்கள் இடம் பெறும்போது அவற்றினை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இளங்குமரனுக்கு அறிவுறுத்தினேன்.

ஆனால், தற்போது இங்கு வந்து பார்க்கும் பொழுது இளங்குமரன் செய்தது பரவாயில்லை அல்லது நல்லது என்று தோன்றுகிறது. இளங்குமரனின் இந்த செயல்பாட்டால் அனைவரும் கலக்கமடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல இன்று பல பிரச்னைகள் வெளிவருகின்றன - என்றார். (எ-05)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கணவன் மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இனிமையான நாள்.

**மிதுனம்**

உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**கடகம்**

புதிய நட்பால் ஆதாயமும் உண்டு. கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**சிம்மம்**

மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கன்னி**

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**துலாம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திவரும்.

**விருட்சிகம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். குடும்பத்தோடு புண்ணியஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**தனுசு**

தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

**மகரம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

**கும்பம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

# சுண்ணக்கல் அகழ்வு விளைவுகளுக்கு அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.07

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ். தென்மராட்சியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்படுவதாக கூறப்படும் இடங்களை அமைச்சர் பார்வையிட்டார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் சரசாலை வடக்கு மற்றும் மந்துவில் பகுதிகளில் சுண்ணக்கல் அகழப்பட்டுவரும் இடங்களுக்கு நேரில் சென்று அவர் ஆராய்ந்தார்.



அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் மற்றும் அதிகாரிகள் சிலரும் சென்றிருந்தனர். (எ-05)

# பரு. மருத்துவமனையில் குருதிக்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம்,ஜன.07

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் தற்போது (A Positive), A- (A Negative), O- (O Negative) இரத்தவகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், இரத்ததானம் செய்ய விரும்புவோர் மற்றும் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை இரத்த வங்கிக்கு வருகை தந்து உதவுமாறு மருத்துவமனை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரத்ததானம் வழங்குவதன் மூலம் நோயாளர்களுக்கு சிகிச்சையை சீராக வழங்க முடியுமென மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(எ-05)

# பெறுபேறுகளை அடிப்படையாக வைத்தே எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு உதவி

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் ஆராய்வு

கிளிநொச்சி, ஜன.07

ஒவ்வொரு பாடசாலைகளினதும் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்தே எதிர்காலத்தில் அந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்களின் இடமாற்றங்கள், பாடசாலை உட்கட்டமைப்பு விருத்திக்கான உதவிகள் என்பனவற்றை வழங்கலாமா? என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.



கிளிநொச்சி புன்னைநீராவி அ. த. க. பாடசாலையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட 29. 75 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் அமைக்கப்பட்ட கட்டடம் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் உரையாற்றிய ஆளுநர், "கிராமப்புற பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதே எங்களின் பிரதான இலக்காக உள்ளது. இதன் ஊடாக கிராமப்புற மாணவர்களும் தமது பிரதேசத்தில் சிறப்பான கல்வியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மாணவர்கள் கல்வியில் சிறப்பான நிலையை அடைவது மாத்திரமல்ல, ஏனையோருக்கு உதவி செய்யும் குணத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், எங்களால் செய்ய முடியாது என்ற ஒன்றில்லை. அக்கறையும் ஆர்வமும் இருந்தால் எதையும் செய்து காட்ட முடியும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்"- என்றார். (எ-02)

# "யாழ்ப்பாண மக்கள் அச்சப்பட தேவையில்லை"

யாழ்ப்பாணம்,ஜன.07

யாழ்ப்பாண மக்கள் அச்சப்படத் தேவையில்லை, பொது மக்கள் அச்சமின்றி செயல்படவும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றவும் பொலிஸார் தயாராக உள்ளனர் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க தெரிவித்தார்.



யாழ். நகரில் புத்தாண்டிக்கு முன்னிரவு இளைஞன் ஒருவர் மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்வியெழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"கடந்த வாரத்தில் யாழ். நகரில் நடைபெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு பேரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம். இரண்டு சம்பவங்கள் குறித்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலதிக சாட்சிகளை எடுத்து மிகுதியான சந்தேக நபர்களை கைது செய்து நீதி மன்றத்தில் முற்படுத்துவதற் குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளோம்"- என் றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக ஆட்சியை உறுதி செய்ய புதிய அரசியலமைப்பு மிகஅவசியம்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து



**கொழும்பு, ஜன. 07**
**ஜனநாயக ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசியலமைப்பு அவசியமானது என கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் ஊழலை விசாரிப்பதற்கான வலுவான பொறிமுறையை ஏற்படுத்த புதிய அரசியலமைப்பு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்ற சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவுக்கும் கொழும்பு பேராயருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் பிற்பகல் இடம் பெற்றதை அடுத்து, கர்தினால் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான தகவல்களை வெளியிடுவது மிகவும் முக்கியம்.

இதை யார் செய்தார்கள், என்ன காரணத்துக்காக, யாருடைய உதவியோடு செய்தார்கள் என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையில் இதுபோன்ற பல விடயங்கள் நடந்துள்ளன.

கொலைகள், காணாமல் போதல்கள், போன்ற பல விடயங்கள் உரிய முறையில் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

ஜனநாயகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல்கள் குறித்து விசாரணை நடத்த தேவையான பொறிமுறையை தயார் செய்ய வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோள்.

அதற்கு தேவையான அரசியலமைப்பு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

தற்போதுள்ள அரசியலமைப்பில் உள்ள பல்வேறு பலவீனங்களை போக்க புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# பல்கலை துணைவேந்தர்கள் பிரதமருடன் நேற்று சந்திப்பு!



கொழும்பு, ஜன. 07
அரச பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களுக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழகங்களில் நிர் வாகச் சிக்கல்கள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வெற் றிடங்கள், மாணவர்களின் குடியிருப்புப் பிரச்னைகள், உதவித் தொகை செலுத்தும் செயல் முறையை முறைப்படுத்துதல் போன்ற பல பிரச்னைகள் குறித்து இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதி கல்வி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# இன்று கூடுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, ஜன. 07
2025 ஆம் ஆண்டுக்கான முதல்வார பாராளுமன்றக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில், முக்கிய சில விடயங்கள் தொடர்பில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனவரி 10 ஆம் திகதிவரை சபை அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது உள்ளாட்சிச்சபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் துறைசார் அமைச்சரால் முன்வைக்கப்படவுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் மற்றும் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் என்பன பற்றியும் எதிரணிகள் கேள்விகளை எழுப்பவுள்ளன.

இன்று மத்திய வங்கி நிதி நிலை அறிக்கை தொடர்பிலும் விவாதிக்கப்படவுள்ளது.

ஜனவரி 09 ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது.

அரிசி தட்டுப்பாடு, சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு உள்ளிட்ட விடயங்களால் அரசு மீது எதிரணிகள் சரமாரியாக விமர்சனக்கணைகளைத் தொடுத்துவருவதால் அரசியல் பரபரப்புக்கு மத்தியிலேயே சபையும் கூடுகின்றது. (அ)

# பஸ் சோதனை நடவடிக்கையால் தொழில்துறைக்கு பெரும் பாதிப்பு

## பஸ் உரிமையாளர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 07
கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கமைய, மேற்கொள்ளப்படும் பேருந்து சோதனை நடவடிக்கை காரணமாக தங்களது தொழில்துறை தொடர்ந்தும் பிரச்னைகளை எதிர் நோக்கி வருவதாக பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்து விசேட வாகனச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், சிவில் உடையில் அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டு, பயணிகள் பஸ்களை ஆய்வு செய்வதுடன், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து சாரதிகளை எச்சரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் இந்த நடவடிக்கைகள், முன்னோடி திட்டமாக எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இரண்டு வாரங்களுக்கு செயல்படுத்தப்படுகிறது.

எவ்வாறாயினும், பொலிஸ் சோதனைகள் காரணமாக தங்களது பணிகளைத் தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக பஸ் சங்கங்களின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் கீழ் பஸ்களுக்குள் சென்று சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடுகள் எதுவும் இல்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வேகத்தடையை நிர்ணயிக்கும் வீதி சமிக்ஞை இல்லாத இடங்களில் வேகமாக வாகனத்தைச் செலுத்துகின்றமைக்காக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

எனவே, பிரதி பொலிஸ் மா அதிபருடனான சந்திப்பில் உரிய வகையில் தீர்வு கிடைக்காவிடின் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்கு தாங்கள் தள்ளப்படுவ தாகப் பேருந்துகள் உரிமையாளர்கள் சங்கங்களின் பிரதி நிதிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்கமுடியாதநிலை

## கொட்டகலை வர்த்தகர்கள் சங்கம்

கொழும்பு, ஜன. 07
தங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை காரணமாக, அதற்கான உரிய தீர்வை வழங்குமாறு கோரி கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் ஜனாதிபதிக்கும் வர்த்தக அமைச்சருக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

கொட்டகலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அந்த சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யுமாறு கொட்டகலையில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தங்களுக்கு சிவப்பரிசி மற்றும் வெள்ளையரிசி ஒரு கிலோகிராம் 295 ரூபாய் என்ற மொத்த விலையில் புறக்கோட்டை சந்தையில் கிடைக்கப் பெறுகிறது.

இவ்வாறான பின்னணியில், எங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது.

மேலும் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி 235 ரூபாவுக்கு மொத்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதுடன், போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளுடன் ஒப்பிடும் போது உரிய விலையில் விற்பனை செய்ய முடியாது-என்றார். (அ)

# காணி ஒதுக்கீடுகள் குறித்து அரசால் சிறப்பு விசாரணை!

கொழும்பு, ஜன. 07
கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பல்வேறு தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் தொடர்பில் விசேட இட விசாரணையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

விசாரணையின் பின்னர் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காணி சீர்திருத்த ஆணையம் மூலம் தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத்துக்கு நிலம் ஒதுக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், கடந்த காலங்களில் காணி விநியோகம் மற்றும் காணி பரிமாற்றம் தொடர்பில் பல பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு முதல் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் யாருக்கு காணி வழங்கப்பட்டுள்ளது என்பதை கண்டறியும் விசாரணை மேற்கொள்ளப்படும் வரை காணி ஒதுக்கீடுகளை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அந்த திட்டங்களுக்கு, எந்த அடிப்படையில் காணி யாருக்கு வழங்கப்பட்டுள்ளது மற்றும் ஏதேனும் ஊழல் அல்லது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதை ஆராய்வதற்காக இந்த விசாரணையை துரிதமாக நடத்த இலக்கு வைத்துள்ளோம் என பிரதி அமைச்சர் மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களை அடக்க எத்தனிக்கும் அரசுகள் நீடித்து நிலைக்கமுடியாது

## சுட்டிக்காட்டுகிறார் திஸ்ஸ அத்தநாயக்க



கொழும்பு, ஜன. 07

**ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு முயற்சிக்கும் அரசாங்கங்களால் நாட்டை நீண்ட காலம் ஆள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஊடக சந்திப்பொன்றில் ஊடகத்துறை அமைச்சர் ஊடகமொன்றை விமர்சித்து அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தார்.

இதன் பொருள் அரசாங்கம் ஊடக அடக்குமுறைக்குத் தயாராகிறது என்பதாகும். தங்களை விமர்சிக்கும் ஊட கங்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் விரும்புகிறது.

அண்மையில் பிரதியமைச்சர் ஒருவரும் ஊட கம் ஒன்றைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

ஊடகங்கள் வாய் திறக்காமல் மௌனமாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் எண்ணமாக இருக்கிறது.

இவ்வாறு ஊடகங்களை அடக்குவதற்கு எத்தனிக்கும் அரசாங்கங்களால் நீடித்து நிலைக்க முடியாது-என்றார்.

இதேவேளை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு சிறைச்சாலையில் விசேட சலுகைகள் வழங்கப்படுவதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறித்தும் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து தெரிவித்தார்.

தாமும் துமிந்த சில்வாவும் சில காலம் ஒரே காலப்பகுதியில் சிறையிலிருந்ததாகவும் அதன்போது அவருக்கு எந்த சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கோழி இறைச்சியின் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 07

நாட்டில் தற்போது முட்டை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் கோழி இறைச்சியின் விலை குறைவடையவில்லை என அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்தார். அத்துடன், முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு விதிக்கப்பட்டுள்ள வற் வரி குறைக்கப்பட்டால் இறைச்சி சார்ந்த உணவுப்பொருட்களின் விலையைக் குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# ரயில் சேவை பாதிப்பு!

கொழும்பு, ஜன. 07

தெற்கு களுத்துறை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் தடம் புரண்டதன் காரணமாக தெற்கு கரையோர மார்க்கமூடான ரயில் சேவை பாதிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு, மருதானையிலிருந்து தெற்கு களுத்துறைக்கு பயணித்த ரயிலொன்றே இவ்வாறு தடம் புரண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், தெற்கு காரயோர மார்க்கமூடான ரயில் சேவையின் ஒரு ரயில் பாதை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், பாதிக்கப்பட்ட ரயில் சேவையை வழமைக்கு கொண்டு வரும் பணிகளை ரயில்வே ஊழியர்கள் முன்னெடுத்தனர். (அ)

# 5 வருடங்களில் வீதி விபத்துக்களினால் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலி!

கொழும்பு, ஜன. 07

கடந்த 5 வருடங்களில் மாத்திரம் வீதி விபத்துக்களால் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, 12 ஆயிரத்து 140 பேர் உயிரிழந்துள்ளதாகக் பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் 2363 பேரும், 2021 ஆம் ஆண்டில் 2,557 பேரும், 2022 ஆம் ஆண்டில் 2, 540 பேரும் வீதி விபத்துக்களால் பலியாகியுள்ளனர்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டு 2,321 பேரும், கடந்த வருடத்தில் 2,359 பேரும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை இடம்பெற்ற பஸ் விபத்துக்கள் தொடர்பிலும் பொலிஸார் தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

அதன்படி குறித்த காலப் பகுதியில் 198 பஸ் விபத்துக்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அதற்கமைய, இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 50 பஸ்களும், 148 தனியார் பஸ்களும் விபத்துக்குள்ளாகியுள்ளன. (அ)

# இளைஞர் சேவை மன்ற நிதி முறைகேடு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ள அரசு

கொழும்பு, ஜன. 07

கடந்த அரசாங்க காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட ஸ்மார்ட் யூத் நைட் கண்காட்சி மற்றும் நிகழ்ச்சி தொடரில் நிதி மோசடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் பூரண விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இளைஞர் சேவைகள் பிரதியமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நோக்கங்களுக்காக, அப்போதைய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரின் பெர்ணான்டோவினால் முன்னெடுக்கப்பட்ட குறித்த திட்டத்தில், இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த நிகழ்ச்சிக்காக 323 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார பிரதியமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.

பாதீட்டில் இளைஞர் விவகார அபிவிருத்திக்காக ஆயிரம் மில்லியன் ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதன் பின்னணியில், இந்த நிகழ்ச்சிக்காக மாத்திரம் அதிக தொகையை செலவிட்டுள்ளமை பாரிய மோசடி என அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இந்த சம்பவம் குறித்து தம்மால் வெளிப்படுத்தப்பட்டதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி, கணக்காய்வு அறிக்கைகள் உள்ளிட்ட ஏனைய தரவுகளுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இளைஞர் விவகார பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்க தவறிய 5 வேட்பாளர்கள் மீது வழக்கு!

கொழும்பு, ஜன. 07

செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய 12 ஜனாதிபதி வேட்பாளர்களில் மீதமுள்ள 5 பேர் மீது அடுத்த வாரம் வழக்கு தொடரப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி தற்போது ஏழு ஜனாதிபதி வேட்பாளர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு அதிகாரியொருவர் கூறுகையில், 'செலவு அறிக்கை சமர்ப்பிப்பு முடிந்த அன்றே தபால் மூலம் அறிக்கை அனுப்பப்பட்டதால், ஒரு வேட்பாளர் மீது வழக்கு தொடரப்படாது.

மேலும், செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர் மீது வழக்குத் தொடரப்பட்டால், அந்த வேட்பாளர் மாகாண அல்லது உள்ளூராட்சிச் சபைத் தேர்த லில் வேட்பாளராக நிற்க முடி யாது-என்றார். (அ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 07

அத்துருகிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லேரிகம பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் அத்துருகிரிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்துருகிரிய பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தெடிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து 06 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# குருநாகல் போதனா வைத்தியசாலைக்குள் நுழைய முயன்ற போலி வைத்தியர் கைது!

கொழும்பு, ஜன. 07

குருநாகல் போதனா வைத்தியசாலைக்குள் ஸ்டெதஸ்கோப்புடன் நுழைய முற்பட்ட போலி வைத்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் குருநாகல், பொத்துஹெர, ஹந்துகல பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து களனி பல்கலைக்கழகத்தின் ராகம மருத்துவ பீடத்தின் வைத்திய அடையாள அட்டை மற்றும் ஸ்டெதஸ்கோப் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 07

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 289 ரூபாய் 72 சதம், விற்பனைப் பெறுமதி 298 ரூபாய் 41 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 358 ரூபாய் 78 சதம், விற்பனைப் பெறுமதி 372 ரூபா 74 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 297 ரூபாய் 14 சதம், விற்பனைப் பெறுமதி 309 ரூபாய் 55 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 315 ரூபாய் 58 சதம், விற்பனைப் பெறுமதி 330 ரூபாய் 86 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 199 ரூபா 93 சதம், விற்பனைப் பெறுமதி 208 ரூபாய் 57 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 178 ரூபாய் 55 சதம், விற்பனைப் பெறுமதி 187 ரூபாய் 91 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 209 ரூபாய் 85 சதம், விற்பனைப் பெறுமதி 219 ரூபாய் 61 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 82 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 90 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கைதிகளை சோதனையிடும் பணிக்கு விரைவில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு!

கொழும்பு, ஜன. 07

சிறைச்சாலை அதிகாரி பதவிகளுக்கு 1,800 வெற்றிடம் நிலவுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கைதிகளை சோதனையிடும் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இந்தநிலையில், கைதிகளைச் சோதனையிடும் பணிகளுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை சுமார் 300 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வர்த்தக உடன்பாட்டினை புதுப்பிக்க பாகிஸ்தான் விருப்பம்!

## விசா கெடுபிடிகளை தளர்த்தவும் கோரிக்கை

கொழும்பு, ஜன. 07

**பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிப்பது தொடர்பில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தானில் உள்ள பௌத்த மரபுரிமை ஸ்தலங்களை இலங்கையின் பௌத்த பீடங்களுக்கு வழங்குதல், போதைப்பொருள் கடத்தலை காரணமாக கொண்டு பாக்கிஸ்தானியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விஸா கட்டுப்பாடுகளை தளர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.**

இலங்கைக்காக பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் பாஹிம் அஜீஸ், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டன.

பாகிஸ்தானில் உள்ள பௌத்த மரபுரிமை ஸ்தலங்களை இலங்கையின் பௌத்த பீடங்களுக்கு பொறுப்பளிப்பது தொடர்பான யோசனையை முன் வைத்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் யோசனையையும் பாகிஸ்தான் முன்வைத்துள்ளது.

குறிப்பாக வாகன உதிரிப்பாகங்கள் ஏற்றுமதி உட்பட நவீன உற்பத்திகளை ஏற்றுமதி செய்து இரு தரப்புக்கும் நன்மைகள் ஏற்படும் வகையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பிக்க வேண்டும் என்பது பாகிஸ்தானின் கோரிக்கையாக உள்ளது.

அதே போன்று பாகிஸ்தானியர்களுக்கு இலங்கையில் வர்த்தக நடவடிக்கைளை முன்னெடுப்பதற்கு தடையாக விஸா விதிமுறைகள் உள்ளன.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்த நிலைமை கடினமாக்கப்பட்டுள்ளதுடன், போதைப் பொருள் கடத்தல்கள் பாகிஸ்தான் ஊடாகவே முன்னெடுக்கப்படுவதாக கூறப்பட்டு இலங்கையில் விஸா விதிமுறைகள் கடினமாக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலை காரணம் காட்டி பாகிஸ்தானியர்களுக்கு விஸா விதிமுறைகள் கடினமாக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

எனவே பாகிஸ்தானியர்களுக்கு இலங்கையில் சுதந்திரமாக முதலீடுகளை செய்ய ஏற்புடைய சூழலையும் உருவாக்கவும் கட்டுப்பாடுகளை தளர்த்தவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான் ஊடாக மாத்திரமன்றி இந்தியா மற்றும் ஈரான் ஊடாகவும் இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தப்படுகின்ற விடயமும் இதன் போது தெரிவிக்கப்பட்டது. (அ)

# துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பழ வியாபாரியிடம் கொள்ளை!

கொழும்பு, ஜன. 07

களுத்துறை, பண்டாரகம, மெதகம, ஹந்துன்வென்ன பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், தங்களை பொலிஸ் உத்தியோகத்தர்கள் என அடையாளப்படுத்தி பழ வியாபாரி ஒருவரிடம் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி 150,000 ரூபா பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

வுணுகம்வெஹர பிரதேசத்தில் வசிக்கும் பழ வியாபாரி ஒருவர் பேருவளை மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள கடைகளுக்கு வாழைப்பழங்களை விற்பனை செய்வதற்காக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை தனது லொறியில் சென்றுள்ளார்.

பின்னர் இந்த பழ வியாபாரி மாலை நேரத்தில் பண்டாரகம பிரதேசத்துக்கு சென்று ஹந்துன்வன்ன பிரதேசத்தில் உள்ள பழ கடை ஒன்றுக்கு முன்பாக லொறியை நிறுத்திவிட்டு, அந்த கடைக்கு வாழைப்பழங்களை விற்பனை செய்து, மீண்டும் லொறியில் ஏற முயன்றார்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் பழ வியாபாரியிடம் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மீண்டும் தலைதூக்கும் கடவுச்சீட்டுப் பிரச்சனை

கொழும்பு, ஜன. 07

புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவை அரசாங்கம் இதுவரை வழங்காத நிலையில், கடவுச்சீட்டு தட்டுப்பாடு தொடருமானால், இலங்கையர்கள் பணி நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறுவதில் சிக்கல்கள் ஏற்படலாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு அடுத்த சில வாரங்களில் சுமார் 30,000 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (அ)

# சட்டவிரோத துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஜன. 07

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 03 சட்டவிரோத துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிரடிப் படையின் புத்தல முகாமின் அதிகாரிகள் குழுவொன்று கொஸ்லந்த கோமதியாவெல பகுதியில் சோதனைகளை மேற்கொண்டது. இதன்படி, நடத்தப்பட்ட 03 சுற்றிவளைப்புகளில் 03 துப் பாக்கிகளுடன் மூன்று சந்தே கநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் 35 மற்றும் 47 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் அட்டாலிவெவ மற்றும் உவமவெலகம பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# அரசுக்கு சொந்தமான ஒரு தொகை இரும்பை விற்பனை செய்ய முற்பட்ட மூன்று பேர் கைது!

கொழும்பு, ஜன. 07

அரசுக்கு சொந்தமான ஒரு தொகை இரும்பினை விற்பனை செய்வதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் அரச ஊழியர்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

அரச கட்டுமான அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமானதெனக் கருதப்படும் வாகனத்தின் சாரதி உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

கடந்த காலங்களில் வெலிப்பன்ன பகுதியில் பாலமொன்றை நிர்மாணிப்பதற்குக் குறித்த இரும்பு தொகை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த திட்டம் தோல்வியடைந்தமையினால் குறித்த இரும்புகளைக் கொழும்பு தலைமையகத்துக்குக் கொண்டு செல்லும் வழியில் சந்தேக நபர்கள் அவற்றை விற்பனை செய்வதற்கு முயற்சித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# வினாத்தாள் கசிந்த விவகாரம் இடைநிறுத்தப்பட்டது பரீட்சை!

கொழும்பு, ஜன. 07

வடமத்திய மாகாணத்தின் 11ஆம் தர சிங்கள இலக்கிய வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகியுள்ளதாக மாகாண கல்விச் செயலாளர் சிறிமெவன் தர்மசேன தெரிவித்துள்ளார்.

இந்த வினாத்தாள் நேற்று முன் தினம் நள்ளிரவு சமூக ஊடகங்கள் ஊடாக வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக நேற்று நடைபெறவிருந்த பரீட்சை இடைநிறுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

சம்பவம் தொடர்பில் மாகாணக் கல்வி அதிகாரிகள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி இதனுடன் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என மாகாண கல்விச் செயலாளர் சிறிமெவன் தர்மசேன வலியுறுத்தினார்.

விரைவில் குறித்த பாடத்திற்கான பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சிறிமெவன் தர்மசேன கூறினார். (அ)

# 12 வயது சிறுமி விபத்தில் பலி!

கொழும்பு, ஜன. 07

இராஜாங்கனை பகுதியில் முச்சக்கர வண்டியொன்று பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 12 வயதான சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

ஒட்டோ வீதியில் சென்று கொண்டிருந்த நாயொன்றுடன் மோதவிருந்த நிலையில் அதனைத் தடுப்பதற்கு முற்பட்டவேளை வீதியில் குடை சாய்ந்து இழுத்துச் செல்லப்பட்டு பின்னர் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 12 சிறுமி உயிரிழந்துள்ளதுடன் சாரதி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

### கிளீன் ஸ்ரீலங்கா திட்டம்

# நிபந்தனையுடன் ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, ஜன. 07

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் 'கிளீன் ஸ்ரீலங்கா' முயற்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த முயற்சிகள் நல்லது என்றும் இலங்கைக்குத் தேவையானது என்றும் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

இதன்படி, தெரு வியாபாரிகள் அகற்றப்படாவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி இந்த முயற்சியை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

சட்டவிரோத வியாபாரிகள் அகற்றப்பட வேண்டும் என்றும், வாகனங்களில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட பாகங்களும் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

# மனுஷவின் சகோதரர் தொடர்ந்து மறியலில்!

கொழும்பு, ஜன. 07

நிதி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் சகோதரரான திசர நாணயக்காரவை எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பின்னர்ந்து நாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி 30 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டுக்கு அமைவாக முன்னாள் அமைச்சரின் சகோதரர் திசர இரோஷன நாணயக்கார கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து கம்பஹா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை ஜனவரி 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அந்த உத்தரவுக்கு அமைவாக அவர் நேற்று வரை விளக்கறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று அவருக்கு விளக்கமறியல் உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவச வாகனத்தில் வந்து 22 வயது இளைஞன் கைது

## ஐஸ் போதை பறிமுதல், சம்மாந்துறையில் பரபரப்பு

சம்மாந்துறை, ஜன.07

**சம்மாந்துறையில் 22 வயது இளைஞன் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கவச வாகனத்தில் வந்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட பல மணிநேர சுற்றிவளைப்பின் பின்னர் குறித்த இளைஞனை கைது செய்தனர்.**



கைது செய்யப்பட்ட இளைஞன் தொடர்பில் சம்மாந்துறை மற்றும் அம்பாறை விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை மாலை இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதன்போது சந்தேகத்துக் கிடமாக ஐஸ் போதைப் பொருளுடன் நடமாடிய 22 வயது இளைஞன் சம்மாந்துறை மற்றும் அம்பாறை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மற்றும் சம்மாந்துறை விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருளுடன் கைதானார். (எ)

# காணி ஆணையாளராக வளர்மதி கடமையேற்பு



கல்முனை, ஜன.07

கிழக்கு மாகாணத்தின் காணி ஆணையாளராக வளர்மதி ரவீந்திரன் கடமைகளை ஏற்றுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் மூத்த அதிகாரியான திருமதி வளர்மதி ரவீந்திரன் கிழக்கு மாகாண காணி ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் நியமிக்கப்பட்டு கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவரின் சேவைத்தரம், தகுதி மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும் தலைமைத்துவ வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத் துவ செயல்பாட்டு திறமைகள் என்பனவற்றை கருத்தில் கொண்டே இந்த நியமனம் வழங்கப்பட்டது. (எ)

# தாராள உள்ளங்கள் அறக்கட்டளை புதிய அலுவலகம் திறந்து வைப்பு



கல்முனை, ஜன.07

கல்முனை தாராள உள்ளங்கள் அறக்கட்டளையின் புதிய அலுவலகம் கல்முனை வாடி வீட்டு வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

அறக்கட்டளையின் தலைவர் ஜெ. ஜெயபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் எஸ். புனிதன் கலந்து கொண்டார்.இதன்போது, மாணவர்களுக்கான மாதாந்த கல்வி உதவித்திட்டம் தொடங்கப்பட்டது.

# நன்நீர் மீன்பிடி மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்கி வைப்பு

திருகோணமலை, ஜன.07

திருகோணமலை - கோபாலபுரம் பிரதேசத்தில் நன்நீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்களுக்கு ரொட்டரி கழகத்தினால் வள்ளங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கோபாலபுரம் மகளிர் சங்கத் தலைவி எஸ். நிஹாரா தலைமையில் கோபாலபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ரொட்டரி கழக மாவட்ட ஆளுநர் சுசேன ரணதுங்க கலந்து கொண்டார்.



# சீமெந்து கலவையை ஏற்றிச்சென்ற வாகனம் திடீரென தடம்புரண்டது



திருகோணமலை, ஜன.07

சீமெந்து கலவையை ஏற்றிச் சென்ற கனரக வாகனம் ஒன்று திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் திருகோணமலை- அக்போபுர பொலிஸ் பிரிவிலுள்ள 85 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது. (எ)

# ரூ. 5000 போலி நாணயத்தாள்களுடன் மூன்று இளைஞர்கள் கைதாகினர்

கல்முனை,ஜன.07

தொலைபேசி விற்பனை நிலையம் என்ற போர்வையில் 5000 ரூபாய் போலி நாணயத் தாள்களை அச்சடிக்கும் நிலையமாக இயங்கி வந்த வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டு அம்பாறை தமன வனகமுவ பிரதேசத்தில் மூன்று சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் 20, 21, 29 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

போலி நாணயத்தாள்களை அச்சடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மடிக்கணினி உட்பட பல உபகரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அந்த வீட்டில் மூன்று ஏ 4 அளவிலான கடதாசிகள் அச்சடிக்கப்பட்டு கத்தரிக்கப்படாத 10 போலியான 5000 ரூபாய் நாணயத்தாள்கள் முதலியவற்றையும் அதிகாரிகள் கண்டெடுத்துள்ளனர். (எ)

# மதிய உணவு தயாரிப்பவர்களுக்கு சுகாதார ஆலோசனை கருத்தரங்கு

கல்முனை, ஜன.07

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தயாரிப்பவர்களுக்கான சுகாதார ஆலோசனை கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மருத்துவர் தஸ்லிமா வஸீரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, உணவு பாதுகாப்பு தொடர்பான விளக்கங்களை பொதுச் சுகாதார பரிசோதகர் எம். எம். சப்னூஸ் வழங்கினார்.

மேலும், உணவு கையாளுபவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ் இதன்போது வழங்கப்பட்டது. (எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் இளைஞன் கைது

கல்முனை,ஜன.07

வெளிநாட்டு சிகரெட்களை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாருக்கு கிடைக் கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது மலையடிக்கிராமம் 02 பகுதி யைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒரு தொகை வெளி நாட்டு சிகரெட்களுடன் கைதானார். (எ)

# மாணவர்கள் கௌரவிப்பு



திருகோணமலை, ஜன.07

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை, உப்புவெளி பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில், பிரதேச சபையின் செயலாளர் திருமதி என். யாழினி தலைமையில் நடை பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீது இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்

## 184 பேர் உயிரிழப்பு, 100 பேர் படுகாயம்

காஸா, ஜன.07

**காஸா மீது இஸ்ரேல் படைகள் நடத்திய சரமாரி ஏவுகணை தாக்குதலில் 184 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே நீண்டகால மாக மோதல்போக்கு நிலவி வந்தது. இதனையடுத்து 2023 ஆம் ஆண்டு ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து ஏற்பட்ட போரில் இதுவரை சுமார் 45 ஆயிரம் பலஸ்தீனியர்கள் பலியாகினர். மேலும் இலட்சக்கணக்கானோர் அகதிளாக அண்டை நாடுகளில் தஞ்சம டைந்தனர். இதனால் இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி போரை முடிவுக்கு கொண்டு வருமாறு உலக நாடுகள் வலியுறுத்துகின்றன. ஆனால், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கும்வரை போர் தொடரும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்படி காஸா மீது கடந்த 3 நாட்களில் 90இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் இராணுவம் வீசியது. இதில் 184 பேர் பலியாகினர்.

இந்த நிலையில் பணய கைதி யாக உள்ள இஸ்ரேல் இராணு வத்தில் பணியாற்றிய லிரி அல்பாக் என்ற இளம் பெண் பேசும் வீடியோவை ஹமாஸ் அமைப்பினர் வெளியிட்டுள் ளனர்.

அதில் தன்னை மீட்க இஸ்ரேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பணய கைதிகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இஸ்ரேலிலும் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. (எ)

# மாநில அரசு என்ற பெயரில் பேரழிவையே டில்லி கண்டது

## ஆம் ஆத்மி மீது மோடி கடும் சாடல்

புதுடில்லி,ஜன.07

மாநில அரசு என்ற பெயரில் டில்லி மக்கள் பேரழிவையே கண்டனர் என்று ஆம் ஆத்மி அரசு மீது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடுமையாக சாடியுள்ளார். எனவே, வரும் டில்லி தேர்தலில் பா. ஜ. கவுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டில்லியில் ஞாயிற்றுக் கிழமை நடந்த பரிவர்தன் பேரணியில் உரையாற்றிய பிரதமர் மோடி, "வளர்ச்சி அடைந்த இந்தியாவின் தலைநகராக டில்லியை நாம் மாற்ற வேண்டும். டில்லியின் வளமான எதிர்காலத்துக்காக பாரதிய ஜனதா கட்சிக்கு இந்தத் தேர்தலில் டில்லி மக்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். கடந்த 10 ஆண்டுகளில் டில்லியில் இருந்த அரசு பேரழிவுக்கு சற்றும் குறைவில்லாதது. டில்லி வளர்ச்சியை விரும்புகிறது.

நான் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை வழங்கியும் அடிக்கல் நாட்டியும் விட்டு நேரடியாக இங்கே வருகிறேன். நாம் 2025 இல் நிற்கிறோம். அடுத்து வரும் 25 ஆண்டுகள் டில்லிக்கும் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் மிகவும் முக்கியமானது. இந்த 25 ஆண்டுகளில் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறும். நாம் அதன் அங்கமாக இருப்போம். இந்த ஆண்டுகளில் இந்தியா ஒரு புதிய நவீன யுகத்துக்கு மாறும்.

உலகின் மூன்றாவது பெரிய பொருளா தாரமாக இந்தியா மாறும் நாள் விரைவில் வரும். டில்லி அதற்கு முக்கிய பங்களிக்க வேண்டும்"- என்றார். (எ)

# "சோரஸுக்கு பைடன் பதக்கம் வழங்கியிருப்பது கேலிக்கூத்து"

வாஷிங்டன், ஜன.07

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜோர்ஜ் சோரஸுக்கு உயரிய விருது வழங்கியிருப்பது கேலிக்கூத்து என்று தொழிலதிபர் எலான் மஸ்க் விமர்சித்துள்ளார்.

அமெரிக்காவில் அரசியல், சமூக சேவை, விளையாட்டு மற்றும் கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பான சேவை புரிந்த 19 பேருக்கு சுதந்திரத்துக்கான ஜனாதிபதி பதக்கங்களை ஜோ பைடன் வழங்கினார். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன், உதைபந்தாட்ட ஜாம்பவான் லயனல் மெஸி, நடிகர்கள் மைக்கேல் ஜே பாக்ஸ் மற்றும் டென்ஜெல் வாஷிங்டன் உள்ளிட்டோர் இந்த விருதை பெற்றுக் கொண்டனர். இந்த நிலையில், டெஸ்லா நிறுவன தலைமைச் செயல் அதிகாரியும் டொனால்ட் ட்ரம்பின் நண்பருமான எலான் மஸ்க் எக்ஸ் தளத்தில், "சோரஸுக்கு பைடன் பதக்கம் வழங்கியிருப்பது ஒரு கேலிக்கூத்து"-என விமர்சித்துள்ளார் .(எ)

# உக்ரைன்மீது கடந்த வாரத்தில் மட்டும் 600 ஆளில்லா விமானங்கள் தாக்குதல்

கீவ், ஜன.07

உக்ரைன் மீது கடந்த வாரத்தில் மட்டும் 600 ஆளில்லா விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு, வெளிநாடுகளில் இருந்து பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதற்கு எதிராக விதிக்கப்பட்ட தடைக்கான நெருக்கடி போதியளவில் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரானது 2022ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 103 ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டன என ஜெலன்ஸ்கி கூறினார்.

இவற்றுடன், வான்வழி வெடிகுண்டுகள் மற்றும் ஏவுகணைகள் என உலகம் முழுவதிலும் இருந்து பெறப்பட்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட ஆயுதங்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளின் தாக்குதலில் இருந்து எங்களுடைய வான்வெளியை நாங்கள் பாதுகாத்து வருகிறோம்.

நேற்று முன்தினம் நடந்த தாக்குதலில் ஈடுபட்ட 103 ஷாகித் வகை ஆளில்லா விமானங்களில் 8,755 வெளிநாட்டு பொருட்கள் இருந் தன என அவர் கூறினார். (எ)

# தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா சொத்து மதிப்பு ரூ. 3,430 கோடி!

பாங்கொக், ஜன.07

தாய்லாந்து பிரதமர் பேடோங்டர்ன் ஷினவத்ராவுக்கு 13. 8 பில்லியன் பாட் (அமெரிக்க டொலரில் 400 மில்லியன் - இந்திய மதிப்பில் ரூ. 3,430 கோடி) சொத்துகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் தேசிய ஊழல் தடுப்பு ஆணைக்குழுவில் அந்த நாட்டு பிரதமர் தனது சொத்து பட்டியலை தாக்கல் செய்துள்ளார்.

இதனை அவரது பியூ தாய் கட்சி உறுதி செய்துள்ளது. (எ)



# கடலோர காவல் படை ஹெலிகொப்டர் விபத்து

## மூவர் உயிரிழப்பு

புதுடில்லி,ஜன.07

இந்தியாவின் குஜராத் மாநிலம் போர்பந்தரில் கடலோர காவல் படை ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கியதில் மூவர் உயிரிழந்தனர்.

போர்பந்தர் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது இந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் மூன்று பணியாளர்கள் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.(எ)

# ஹிஸ்புல்லாவுக்கு இஸ்ரேல் மிரட்டல்

டெல் அவிவ்,ஜன.07

லெபனான் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள லித்தானி ஆற்றுப் பகுதியை ஒட்டி முகாமிட்டுள்ள படையினரை திரும்பப் பெற வேண்டும் என ஹிஸ்புல்லாவை இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது. ஹிஸ்புல்லா - இஸ்ரேல் இடையே கடந்த ஆண்டு நவம்பர்27ஆம் திகதி போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது. இந்த நிலையில் இஸ்ரேல் மேற்கண்டவாறு எச்ச ரிக்கை வெளியிட்டுள்ளது. (எ)

## பா. ஜ. கவுக்கு கெஜ்ரிவால் பதிலடி

புதுடில்லி, ஜன.07

டில்லி அரசை துஷ்பிரயோகம் செய்தே பா. ஜ. க. தேர்லில் வாக்கு கேட்கிறது என்று விமர்சித்துள்ள ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், பிரதமர் மோடியால் திறந்து வைக்கப்பட்ட திட்டங்கள் மத்திய அரசு மற்றும் டில்லி நகர நிர்வாகத்தின் கூட்டு முயற்சி என்று தெரிவித்துள்ளார்.

அவர்கள் எங்களின் தலைவர்களை சிறைக்கு அனுப்பினார்கள். ஆனால், எங்களுக்கு எதிராக நடந்த அட்டூழியங்களை நாங்கள் பிரச்சனையாக்கவில்லை. நாங்கள்மக்களுக்காக உழைத்தோம் இல் லையென்றால் இந்தத் திட்டங்கள் வந்திருக்காது என்றார். (எ)

# விமானத்தின் ரயர்கள் வெடித்ததால் பரபரப்பு

மெல்பேர்ண்,ஜன.07

அவுஸ்திரேலியாவில் புறப் பட தயாராக இருந்த விமானத் தின் ரயர்கள் வெடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

ரயர்கள் வெடித்ததை கண்டறிந்து விமானிகள் உடனடியாக விமானத்தை நிறுத்தியதால் பெரும் அசம் பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இதனால், 289 பய ணிகளும் உயிர் தப்பினர். (எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இறுதியில் அபார ஆட்டம் சம்பியனானார் சபலெங்கா

பிரிஸ்பேன், ஜன.07

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் பெலாரஸின் அரினா சபலெங்கா சம்பியனானார்.

இறுதிப்போட்டியில் அரினா சபலெங்கா, ரஷ்யாவின் போலினா குடெர்மெடோவா உடன் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 4 - 6 என்ற புள்ளிக்கணக்கில் சபலெங்கா இழந்தார்.

இதையடுத்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சபலென்கா அடுத்த இரு செட்களை 6 - 3, 6 - 2 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதன் மூலம் 4 - 6, 6 - 3, 6 - 2 என்ற செட் கணக்கில் போலினா குடெர்மெடோவாவை வீழ்த்தி சபலெங்கா சம்பியன் பட்டம் வென்றார். (எ)




## நட்சத்திர வீரர்கள் தேவையில்லை!

மும்பை, ஜன.07

விராட் கோலி, ரோஹித் சர்மா போன்ற வீரர்களை நட்சத்திரங்களாக கருதி பி. சி. சி. ஐ. சலுகைகள் வழங்குவதாக இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். எனவே, இவை அனைத்துக்கும் அடுத்த 10 நாட்களுக்குள் பி.சி.சி.ஐ முடிவு கட்ட வேண்டும் என்றும், அப்படிப்பட்ட வீரர்கள் இந்தியாவுக்கு தேவையில்லை என்றும் கவாஸ்கர் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியில் நட்சத்திர கலாசாரம் முடிவுக்கு வருவது தற்போது மிகவும் முக்கியம். இந்திய கிரிக்கெட்டுக்கான ஈடுபாடு தவிர்க்க முடியாததாக இருக்க வேண்டும். மருத்துவ காரணங்களை தவிர்த்து அனைத்து வீரர்களும் ஒவ்வொரு முறையும் விளையாட தயாராக இருக்க வேண்டும்.

ஒருவேளை இந்தியாவுக்காக விளையாட யாராவது ஈடுபாட்டுடன் இல்லை என்றால் அவர்கள் தெரிவுக்கு தகுந்தவர்களாக இருக்கக்கூடாது. பாதி இங்கேயும் பாதி எங்கேயோ இருக்கக்கூடிய வீரர்கள் இந்தியாவுக்கு தேவையில்லை. வீரர்களுக்கு சலுகைகள் வழங்குவதை நிறுத்த வேண்டிய நேரம் இதுவாகும்- என்றார். (எ)

# பிரிஸ்பேன் ரென்னிஸ் லெஹெக்கா சம்பியன்




பிரிஸ்பேன், ஜன.07

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜிரி லெஹெக்கா சம்பினானார்.

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் செக்குடியரசு வீரர் ஜிரி லெஹெக்கா, உலக தரவரிசையில் 293ஆவது இடத்தில் இருக்கும் அமெரிக்க வீரர் ரைய்லி ஒபெல்காவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் லெஹாக்கா 4 - 1 என்ற கணக்கில் முதல் செட்டில் முன்னிலையில் இருந்தபோது, ரைய்லி ஒபெல்கா காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினார். இதையடுத்து ஜிரி லெஹெக்கா சம்பியன் பட்டம் வென்றார். (எ)

# ஹொங்கொங் ஓபன் ரென்னிஸில் சம்பியனானார் அலெக்ஸாண்ட்ரே

ஹொங்கொங், ஜன.07

ஹொங்கொங் ஓபன் ரென்னிஸ் தொடரில் அலெக்ஸாண்ட்ரே முல்லர் சம்பியன் பட்டம் வென்றார்.

ஹொங்கொங் ஓபன் ரென்னிஸ் தொடர் காஸ்வே பேயில் உள்ள விக்ரோரியா ரென்னிஸ் மையத்தில் நடைபெற்றது. இந்தத் தொடரில் பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் லீக், காலிறுதி, அரையிறுதி சுற்று ஆட்டங்களின் முடிவில் பிரான்ஸின் அலெக்ஸாண்ட்ரே முல்லர் மற்றும் ஜப்பானின் கீ நிஷிகோரி ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

இந்த நிலையில், இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதல் செட்டை 6 - 2 என்ற புள்ளிக்கணக்கில் கீ நிஷிகோரி கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அடுத்தடுத்த செட்களை 6 - 1, 6 - 3 என்ற புள்ளிக்கணக்கில் அலெக்ஸாண்ட்ரே முல்லர் கைப்பற்றினார்.



இதன் மூலம் 2 - 6, 6 - 1, 6 - 3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அலெக்ஸாண்ட்ரே முல்லர் சம்பியனானார். (எ)

# இஸ்மாத் ஆலம் சதம்

புலவாயோ, ஜன. 07

இஸ்மாத் ஆலத்தின் சதத்தின் உதவியுடன் சிம்பாவேவுக்கு 278 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது ஆப்கானிஸ்தான் அணி. இந்த நிலையில், 205 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து இக்கட்டான நிலையில் சிம்பாவே அணி துடுப்பெடுத்தாடி வருகிறது. வெற்றிக்கு இன்னும் 73 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற நிலையில் இரண்டு விக்கெட்கள் மட்டுமே மீதம் உள்ளன. (எ)




# கிண்ணம் வழங்க அழைக்கவில்லை

## சுனில் கவாஸ்கர் அதிருப்தி

சிட்னி, ஜன.07

பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரை 3 - 1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது. இந்த நிலையில், வெற்றிக் கிண்ணத்தை வழங்க தன்னை அழைக்கவில்லை என்று சுனில் கவாஸ்கர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.



இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் அவுஸ்திரேலிய அணி 3 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்று அசத்தியுள்ளது.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய அணிக்கு கிண்ணத்தை வழங்க தன்னை அழைக்கவில்லை என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

நான் மைதானத்தில்தான் இருந்தேன். அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதால், நான் கிண்ணத்தை வழங்க விரும்பமாட்டேன் என்றெல்லாம் கிடையாது. அவர்கள் நன்றாக விளையாடியதால், வெற்றி பெற்றார்கள்- என்றார். (எ)

### 147 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில்

# மாபெரும் சாதனை படைத்த பாபர் அஸாம் - ஷான் மசூத்

கேப்டவுன்,ஜன.07

147 ஆண்டு கால டெஸ்ட் வரலாற்றில் பாபர் அசாம் - ஷான் மசூத் ஜோடி மாபெரும் சாதனை படைத்துள்ளது.

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கேப்டவுனில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே தென்னாபிரிக்கா 615 ஓட்டங்களும், பாகிஸ்தான் 194 ஓட்டங்களும் எடுத்தன.

இதனையடுத்து பாலோ ஒன் ஆன நிலையில் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஷான் மசூத் மற்றும் பாபர் அஸாம் சிறந்த ஆரம்பத்தை அமைத்து கொடுத்துள்ளனர். இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 205 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்து அசத்தினர்.

இதன் மூலம் 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் "பாலோ ஒன்" ஆன பிறகு முதல் விக்கெட்டுக்கு அதிக ஓட்டங்கள் எடுத்த தொடக்க ஜோடி என்ற மாபெரும் சாதனையை பாபர் அஸாம் - ஷான் மசூத் படைத்துள்ளனர்.

அந்த பட்டியல் வருமாறு,1. பாபர் அஸாம் - ஷான் மசூத் - 205 ஓட்டங்கள்,2. கிரெம் சுமித் - நீல் மெக்கன்சி - 204 ஓட்டங்கள்,3. தமீம் இக்பால் - இம்ருல் கயஸ் - 185 ஓட்டங்கள்,4. மார்கஸ் - ட்ரெஸ்கோதிக் - மைக்கேல் வாகன் - 182 ஓட்டங்கள்,5. கிரஹாம் கூச் - மைக்கேல் அதர்டன் - 176 ஓட்டங்கள்.




இந்த போட்டியின் 3ஆவது நாள் முடிவில் பாகிஸ்தான் ஒரு விக்கெட்டை இழந்து 213 ஓட்டங்கள் அடித்துள்ளது. ஷான் மசூத் 102 ஓட்டங்களுடனும், குர்ரம் ஷசாத் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பாபர் அஸாம் 81 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இன்னும் 208 ஓட்டங்கள் அடித்தாக வேண்டும் என்ற நிலையில் போராடி வருகிறது. அந்த சூழலில் 4ஆவது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்...

செய்ய ஆரம்பித்துள்ளனர்.

எஞ்சி இருக்கின்ற நெல்லையாவது காப்பாற்றும் நோக்குடன் தாம் அறுவடை ஆரம்பித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த போகங்களிலும் நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் குறைவடைந்த நிலையில் இம்முறையும் தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் கூறினர்.

கடந்த கால போகத்திலும் ஒரு ஏக்கருக்கு 5-8மூடைகளே அறுவடை செய்ய முடிந்ததாக விவசாயிகள் குறிப்பிட்டனர்.

## மக்கள்...

இருக்கக்கூடிய ஆறாத வடுக்களை, மக்கள் மனங்களில் இருக்கக்கூடிய ரணங்களை எப்போதும் தணிப்பதாக இருக்க வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து வேட்டையின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச படைகளினால் இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு அல்லது அதற்குப் பின்னரான காலப் பகுதியில் கைது செய்யப்பட்டு, தொடர்ந்தும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் முன்னெடுத்து வரும் கையெழுத்து வேட்டைக்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது ஆதரவை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 162 ஆக இருந்த தமிழ் அரசியல் கைதிகளில் தற்போது 10 பேர் தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். அவர்களில் எட்டு பேர் மீது இலங்கை நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இருவர் இதுவரை வழக்கு விசாரணைகள் இல்லாமல் தொடர்ந்தும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

கிளீன் சிறிலங்கா என்ற வேலைத்திட்டத்தை இந்த அரசு நாட்டில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அரசின் கரங்களானது,ஓர் இனத்தின் கரங்களில் வலிந்து திணித்த போரின் காரணமாக ஏற்பட்ட இரத்தக் கறை படிந்து காணப்படுகின்றது. அதனை அந்த அரசு சுத்தம் செய்வதற்கு முன் வரவேண்டும் என மாணவர்களாக நாம் வேண்டி நிற்கின்றோம்.

இனப்படுகொலை, போர் குற்றத்துக்கு இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும். இந்த இனப்படுகொலை போருடன் தொடர்புபட்டவர்கள் தான் இந்த அரசியல் கைதிகள். அவர்களை வெறுமனே அரசியல் கைதிகள் என்று அழைப்பதற்கு பதிலாக, சர்வதேச பன்னாட்டு சமவாயங்களுக்கு அடிப்படையிலே அவர்களை நாங்கள் போர் கைதிகள் என்று தான் அழைக்கவேண்டும்.

எம் மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்னை என்பது ஒரு சர்வதேச பிரச்னையாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இது சர்வதேச பிரச்னையாக மாற்றப்பட வேண்டுமேயானால் சர்வதேச, ஜெனிவா சமவாயங்களுக்கு உட்பட்டு போர் கைதிகள் என்ற சொல்லாடல் தான் உபயோகப்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.

ஆனால் மாறாக ஒரு உள்நாட்டில் நடைபெறக்கூடிய குற்றம் என்ற வகையில், அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கையாளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு வருத்தமான செய்தியையும் இந்த நேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம் - என்றார். (அ)

## அரிசி பதுக்கல்...

குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டில், அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அரிசி விற்பனை தொடர்பாக, வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில், 126 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வடக்கு மாகாணத்தில், பாரியளவிலான அரிசி பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## வெளிநாட்டு...

இதனையடுத்தே, அந்த முதலீடுகளை இந்தியா மற்றும் வியட்நாமுக்கு தாம் கொண்டு சென்றதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்த தென்கொரிய தூதுவர் மியோன் லீ மற்றும் ஆஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீவன் ஆகியோரே இந்த முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

தென்கொரிய தூதுவர் மேலும் கூறுகையில்-

முத்துராஜவெலவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு குழாய் மூலம் எரிபொருளைக் கொண்டு செல்வதற்காக அழைக்கப்பட்ட திறந்த கேள்வி கோரலை எனது நாட்டைச் சேர்ந்த முதலீட்டாளர் பெற்றனர். ஆனால் கப்பம் கொடுக்காத காரணத்தால், திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறியிருந்தார். (அ)

## நாட்டின்...

அதிபர் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும், சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## வீதியில்...

அதிபர் திலக் சீ.ஏ.தனபால தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்தில் உள்ள வீதிகளில் கட்டாக்காலி (அலைந்து திரியும்) மாடுகளின் நடமாட்டங்கள் அதிகமாக காணப்படுவதால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு எதிர்வரும் 7 ஆம் திகதியில் இருந்து ஒரு வாரத்துக்கு வட மாகாணம் முழுவதும் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக எச்சரிக்கை வழங்கப்படவுள்ளது. அவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் கருத்தில் கொள்ளாத கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-05)

# வெற்றுக் கடவுச்சீட்டு கொள்வனவு கட்டளையை முன்வைக்க ஏற்பாடு!

### அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஜன. 07

வெற்றுக் கடவுச்சீட்டுக்கான கொள்வனவு கட்டளையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



வெளிவிவகார அமைச்சில் நேற்று இலத்திரனியல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையர்களுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் 7,50,000 இற்கும் அதிகமான கடவுச்சீட்டுக்கு மேலதிகமாக புதிய கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படவேண்டும்.

கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் புதிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டதை அடுத்து இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

கொள்கை ரீதியாகக் கடந்த அரசாங்கம் முன்னர் மேற்கொண்ட தவறான தீர்மானமே இந்த நெருக்கடி நிலைக்குக் காரணம்.

கடவுச்சீட்டுக்கான முன்பதிவுகளை மேற்கொண்டு சிலர் ஐந்து முதல் ஆறு மாதங்களாகக் காத்திருக்கின்றனர்.

இதன்காரணமாக கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கான பொறுப்பை புதிய நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன - என்றார். (அ)

# 2024 இல் 28,158 மில்லியன் பெறுமதியுடைய போதைப்பொருள் கைப்பற்றிய கடற்படை!

கொழும்பு, ஜன. 07

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் 28 ஆயிரத்து 158 மில்லியன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் மற்றும் போதை மாத்திரைகள் கைப்பற்றியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பெருமளவிலான போதைப்பொருட்களும், 407 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதாக கடற்படை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நாட்டின் சட்டத்தை அமுல்படுத்தும் ஏனைய தரப்பினர் மற்றும் பிராந்திய கடல்சார் பங்காளர்களுடன் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அதற்கமைய கடந்த வருடத்தில் 622 கிலோகிராமுக்கும் அதிக நிறையுடைய ஹெராயின் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் ,அவற்றின் மொத்தப் பெறுமதி 15 ஆயிரத்து 554 மில்லியன் ரூபாவுக்கு அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11 ஆயிரத்து 508 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருள், 700 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியான கேரள கஞ்சா, சுமார் 23 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள உள்ளூர் கஞ்சா, மற்றும் 373 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய போதை மாத்திரைகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## எலிக்காய்ச்சல்...

மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் வலியுறுத்தினார். (அ)

## 1கிலோ...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றியதாக தெரியவில்லை. அரசாங்கம் நாட்டுக்கு பாரிய சாபத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாடு தற்போது பயணிக்கும் பாதை மாறுபட்டவித்தில் அமைந்துள்ளது . இந்த பாதை உரியவாறு அமையப் பெறாத பட்சத்தில் பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும். நாட்டின் தேசிய பாதூகாப்புக்கு தற்போது அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டுள்ளது. அனைத்து பிரதேசங்களிலும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் பதிவாகின்றன. போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

தேசிய பாதுகாப்பு குறித்து தேர்தல் மேடைகளில் சத்தமிட்ட அரசாங்கம் தற்போது தங்க ஆபரணங்களை அணிந்து வீதியில் பயணிக்க முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது-என்றார். (அ)

## ஊடகங்களை...

வழங்கியுள்ளோம் என்பதே எம்முடைய அரசாங்கத்துக்கு இருந்த குற்றச்சாட்டாகும். ஊடகங்களும் சரி சமூக ஊடகங்களும் சரி ராஜபக்ஷர்கள் தொடர்பில் அதிக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. இந்நிலையில் நாம் ஊடகங்களுக்கு வழங்கிய சுதந்திரத்தின் காரணமாகவே அவ்வாறு அனைவராலும் செயற்பட முடிந்தது.

இந்நிலையில் ஏன் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடவில்லை என்பதே தற்போது எம் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகவுள்ளது. அரசாங்கம் தம்முடைய இயலாமையை மறைக்க ஊடகங்களை விமர்சிக்கின்றது.அவ்வாறு அரசாங்கத்தை கொண்டு நடத்த முடியாது - என்றார்.

## அரசியல்...

6 நாட்கள் போராட்டம் இடம்பெற்றதுடன் நேற்று ஏழாவது நாளாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்தக் கையெழுத்து போராட்டத்தில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சாதனைத் தமிழன் ஆறு. திருமுருகன், யாழ், மறை மாவட்டக் குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.ரகுராம், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், பொது மக்கள் என பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இலங்கைக்கு குறுகிய நேர விஜயம் செய்த சீன வெளியுறவு அமைச்சர்!



கொழும்பு, ஜன. 07

சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் அரசியல் பணியக உறுப்பினரும் சீன வெளியுறவு அமைச்சருமான வாங் யி, நமீபியாவுக்குச் செல்லும் வழியில் நேற்று முன்தினம் இலங்கையில் சிறிது நேரம் தங்கியிருந்து சென்றுள்ளார். இதன்படி, சீன உயர்மட்ட குழுவினர் இலங்கை நேரப்படி 14.18 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக இலங்கை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தெரிவித்துள்ளது.

18 உறுப்பினர்களைக் கொண்ட சீனக் குழுவை இலங்கைக்கான சீனத் தூதர் குய் ஜென்ஹாங், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவர் ஹர்ஷா அபேவிக்ரம உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

சீன வெளியுறவு அமைச்சரும் அவரது குழுவும் இலங்கை நேரப்படி 16.23 மணிக்கு இலங்கையிலிருந்து புறப்பட்டனர். ஜனவரி 5 முதல் 11 வரை நமீபியா, கொங்கோ குடியரசு, சாட் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு வாங் யி விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பாடசாலையின் சுற்றுவேலிகளை நாசம் செய்த காட்டு யானைகள்!

மட்டக்களப்பு, ஜன.07

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள வெள்ளிமலைப் பிள்ளையார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் அதன் அருகில் அமைந்துள்ள பாலர் பாடசாலை ஒன்றினுள் காட்டு யானைகள் புகுந்து அங்குள்ள சுற்று வேலிகளை நாசம் செய்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, போரதீவு பற்று பிரதேசத்தில் நீண்ட காலமாக காட்டு யானைகளின் அட்டகாசங்கள் தொடர்ந்து வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதனால் வெல்லாவெளி, வேத்துசேனை, காக்காச்சிவட்டை, விவேகானந்தபுரம், தும்பங்கேணி, திக்கோடை, களுமுந்தன்வெளி உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டு யானைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

## நுண்நிதிக் கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் மரணம்!

கொழும்பு, ஜன. 07

இலங்கையில் கடந்த சில வருடங்களில் நுண்நிதிக் கடன் வலையில் சிக்கிய சுமார் 200 பெண்கள் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளனர் என தேசிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்தார்.

இந்த நாட்டில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக் கடன் பெறுகின்றனர். அதில் 24 இலட்சம் பேர் பெண்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள நுண் நிதி நிறுவனங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிக வட்டிக்குக் கடன் வசதிகளை வழங்குவதாகவும், கடனைச் செலுத்த முடியாத சில பெண்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சில பிரதிநிதிகளினால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாவதாகவும் ஹாஷினி சில்வா தெரிவித்தார்.

இந்நிலைமையால் குடும்பங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்ந்து பிள்ளைகள் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளதாகவும், சில பெண்கள் வேலை செய்ய வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேறத் தூண்டப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிறுவனங்கள் வாரத்துக்கு 20 வீதம் முதல் 30 வீதம் வரை அதிக வட்டி வீதங்களுடன் வசூலிக்கின்றன. இதனால் பெண்கள் கடனில் தள்ளப்படுகிறார்கள்.

நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வந்துள்ள போதிலும், அது இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார். (அ)

# சீனாவில் பரவிவரும் வைரஸ் பயப்படவேண்டிய ஒன்றல்ல!

### பேராசிரியர் சந்திம ஜீவந்தர



கொழும்பு, ஜன. 07

**சீனாவில் பரவி வரும் மனித மெட்டாப் நியூ மோவைரஸ் வைரஸ் பயப்படவேண்டிய ஒன்றல்ல என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் துறையின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

தனது எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "குளிர் காலத்தில் சுவாச நோய்த்தொற்றுகள் பொதுவானவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

2001ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட எச்.எம்.பி.வி வைரஸ் புதிய வைரஸ் அல்ல என்றும் பொதுவாக சளி அல்லது காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்துவதாகவும் பேராசிரியர் சந்திம ஜீவந்தர கூறினார்.

இருப்பினும், எச்.எம்.பி.வி வைரஸ் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்பு உள்ளவர்களுக்கு தீவிரமாக இருக்கலாம் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் நிலை பொதுவாக ஒரு வாரத்துக்குள் குறையும் என்று பேராசிரியர் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இது தொடர்பான பிரச்னையான சூழ்நிலை இலங்கையில் பதிவாகவில்லை என இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கையின் சுகாதார அதிகாரிகள் அவதானம் செலுத்தி வருவதாகவும் இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# தீர்வுக்கான நல்லெண்ண சமிக்ஞைகளை தே. ம. சக்தி இதுவரை வெளியிடவில்லை

### பேராசிரியர் ரகுராம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.07

"ஈழத்தமிழர் பிரச்னைகளை தீர்ப்பதற்கான அரசியல் நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் சமிக்ஞைகளை தேசிய மக்கள் சக்தி இதுவரை வெளியிடவில்லை"- இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார்.

பிரச்னைகளை தீர்ப்பதற்கான ஓர் ஆக்கபூர்வமான அல்லது இதயசுத்தியுடனான செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான அறிகுறிகளை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதில் நினைவுப் பேருரை ஆற்றிய பேராசிரியர் ரகுராம் மேலும் குறிப்பிடுகையில்,

"இன்றைக்கு எங்களின் மிக முக்கியமான பிரச்னைகளாகயிருக்கின்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நிலைப்பாடு, படைகளிடம் கையளிக்கப்பட்டோர் தொடர்பில் வெளிப்படையான பிரகடனத்தை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

மீதம் உள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருந்த போது கொழும்பிலிருந்து குமார் பொன்னம்பலம் ஆற்றிய பணிகள் மாத்திரமல்ல, போராட்டம் முன்னெடுக்கப்படுகின்ற ஆரம்ப கால கட்டங்களிலும், அந்தப் போராட்டத்தினுடைய நேர்மையை, தாற்பரியத்தை உணர்ந்தவராக அவர் ஆற்றிய பணிகளும் எடுத்த முடிவுகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறிப்பாக அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாக கொழும்பிலே விடுதலைப் போராட்டத்தை மிக நியாயத்துடன் உச்ச குரலிலே எடுத்துச் சொல்லி, அந்த நியாயத்தை உலகெங்கும் பரப்புவதற்கும் விடுதலைப் போராட்டத்துக்கு தன்னால் இயன்ற தார்மீக அந்தஸ்த்தை பெற்றுத்தருவதிலும் அவர் முனைப்புடன் செயல்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட காலப்பகுதியில் நாங்கள் வன்னிப்பகுதியில் ஊடகத்துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, அவருடைய பேச்சுகள் அவர் அளிக்கின்ற விளக்கங்கள் எல்லாம் எமக்கு கிடைக்கின்றபோது அவரை பற்றிய மிகப்பெரிய பிரமிப்பு எங்களுக்கு ஏற்பட்டது.

சாதாரணமாக அரசியல்வாதிகள் தமிழ்த் தலைவர்கள் என சொல்லப்படுபவர்கள் அவ்வாறான சூழலிலே எப்படி செயலாற்ற வேண்டும், எப்படி தங்கள் குரல்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக குமார் பொன்னம்பலம் விளங்கினார்.

உண்மையில் இன்று மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவுப்பேருரையை ஆற்றுவதற்கு எனக்கு அழைப்பு கிடைத்தபோது, எனக்குள் என்னுடைய வாழ்க்கையிலே முதல் தடவையாக 1982ஆம் ஆண்டு எனது 9 வயதிலே சந்தித்த முதலாவது அரசியல்வாதி அவர் தான் என்ற நினைப்பு எழுந்தது" - என்றார். (எ)

# கழுத்து இறுகும்வரை பார்த்திராமல் அரசுக்கு அழுத்தத்தை கொடுங்கள்!

### மக்கள் போராட்ட அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன. 07

மக்கள் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுக்காமல் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக் கொள்ள அழுத்தம் கொடுக்க வேண்டும் என மக்கள் போராட்ட அமைப்பின் நிறைவேற்று உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மக்களுக்கு சுமையாக இருக்கும் வரிகளை நீக்குவதாக தெரிவித்து அதிகாரத்துக்கு வந்துள்ள அரசாங்கம் ரணில் விக்கிரமசிங்க விதித்த அனைத்து வரிகளையும் அவ்வாறே தொடர்ந்து கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விசேட வர்த்தக வரி காரணமாக அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை பாரியளவில் அதிகரிக்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவு பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரிகளை நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்தல் மேடைகளில் வாக்குறுதி வழங்கி இருந்தது.

அதேபோன்று பாடசாலை உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியை நீக்குவதாக தெரிவித்திருந்து.

ஆனால் தெரிவித்த விடயங்களுக்கு முற்றாக, மாற்றமான விடயங்களே தற்போது செயற்படுத்தி வருகிறது.

மக்களும் சற்று பொறுத்துப் பார்ப்போம் என்று தெரிவித்துக் கொண்டு, கழுத்து இறுகும் வரை பார்த்துக்கொண்டிக்கக்கூடாது.

தற்போதே இந்த பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள அரச ாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org